<u>நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>

<u>சி.சி. 59/2020</u>

2023 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 08 ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 8 வது நபரின் வாக்குமுலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.மணி | வயது | 56 |
| த.பெ.(அ)க.பெ. | சேட்டு | தொழில் | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| ஊர்/பணிபுரியுமிடம் | கந்திலி | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது கந்திலி காவல் நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பாக நான் நாட்றம்பள்ளி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலருந்த சமயம் கடந்த 13.05.2019 அன்று திருப்பத்தூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த சத்யா க/பெ, நடராஜன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று நிலையம் திரும்பி நிலைய குற்ற எண்.236/2019 இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2)–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துக்கொண்டேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அன்றைய தினமே காலை 09.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஞானசேகரன் மற்றும் சத்தியமூர்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துக்கொண்டேன். **பார்வைமகஜர் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் அன்றைய தினமே சாட்சி வித்யா என்பவர் எடுத்து ஆஜர் செய்த வழக்கு சொத்தான காய் நறுக்கும் கத்தி ஒன்றை கைப்பற்றுதல் மகஜர்மூலம் கைப்பற்றிக்கொண்டேன். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் சத்யா, நித்யா, வித்யா, கிருஷ்ணன், ஞானசேகரன், சத்தியமூர்த்தி ஆகியோர்களை தனித்தனியாக விசாரனை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கு சம்பவத்தில் காயமடைந்த நபரான சத்யா

என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.செந்தில்நாதன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர் சொற்பகாயம் என வழங்கிய காயசான்றிதழை பெற்றுக்கொண்டேன். **காயசான்றிதழ் ஏற்கெனவே அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** பின்னர் 13.05.2019 அன்று பகல் 15.00 மணிக்கு ஜங்களாபுரம் கூட்ரோடு அருகே வைத்து எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். வழக்கு சொத்தினை படிவம் 91–ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிக்கொண்டேன். **படிவம் 91 அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எனது புலன் விசாரணையை முடித்து எதிரியின் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2)–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துக்கொண்டேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=**

மருத்துவமனையிலிருந்து எங்களுக்கு 13.05.2019 அன்று காலை தகவல் தெரிந்தது. அப்போது நான் அ.சா.1 னிடம் புகார்வாக்குமூலம் பெறும் போது அவருடன் அவருடைய உறவினர்கள் இருந்தார்கள் பெயர் ஞாபகமில்லை.மேற்படி புகாரில் அ.சா.1 தன்னுடைய மாமியார் ராஜம்மாள் வீட்டு வாசலில் சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு நான் 13.05.2019 அன்று காலை 09.15 மணிக்கு சென்றேன். சம்பவ இடத்தில் யார் யார் இருந்தார்கள் என தற்போது எனக்கு சரியாக ஞாபகமில்லை. சம்பவ இடத்தில் சுமார் ஒருமணி நேரம் இருந்திருப்பேன். அப்போது நான் சம்பவ இடத்தில் இருந்த வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள அக்கம் பக்கம் உள்ளவர்களை விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அதில் சம்பவ இடத்தை யார் காண்பித்தார்கள் என்றால் தற்போது ஞாபகமில்லை. வழக்கு சொத்தை சாட்சி வித்யா எடுத்து ஒப்படைத்தார். அந்த கத்தியை அவருடைய வீட்டிலிருந்து தான் கொண்டு வந்திருந்தார் என்றால் சரிதான், சம்பவ இடத்திலிருந்து எடுத்து வைத்ததாக கூறினார். வித்யாவிடம் 13.05.2019 அன்றே வாக்குமூலம் பெற்றேன். புகார்தாரரிடம் மறுவிசாரணை எப்போது செய்தேன் என்றால் மறுவிசாரணை எதுவும் செய்யவில்லை. வாக்குமூலத்தில் திருலோகரசு அவருடைய மகளை கையால் அடித்ததாக மிகைப்படுத்தி சொல்லிவிட்டதாகவும், வாய்தகராறு செய்திருந்தார் என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். மருத்துவரை நான் 18.03.2020 அன்று விசாரித்தேன். மருத்துவரிடம் வஜ்ஜிரம் வீட்டின் முன்பாக சம்பவம் நடந்ததாக அ.சா.1 கூறியுள்ளார் என வாக்குமூலம் அளித்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி நான் வஜ்ஜிரம் வீட்டின் அருகே விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான், ராஜம்மாள் வீட்டின் அருகே தான் விசாரித்தேன்.மேற்படி வஜ்ஜிரம் வீட்டின் அருகே நடந்த சம்பவத்திற்கு தான் புகார் பதிவு செய்தேன் என்றால் இல்லை, ராஜம்மாள்

வீட்டின் அருகே நடந்த சம்பவத்திற்கு தான் புகார் பதிவு செய்தேன். வழக்கின் சாட்சிகள் புகார்தாரர்களின் உறவினர்கள் என்றால் சரிதான். புகார்தாரரே தன்னுடைய வாக்குமூலத்தில் வாய்தகராறு தான் ஏற்பட்டதாக கூறியுள்ள நிலையில் நான் இவ்வழக்கினை எதிரியின் மீது பதிவு செய்தது தவறு என்றால் சரியல்ல. புகார்தாரருக்கும் எதிரிக்கும் முன்விரோதம் இருந்த நிலையில் அவர் தவறான சங்கதிகளின் அடிப்படையில் கொடுத்த புகாரினை சரிவர விசாரிக்காமல் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடம் சொல்லவில்லை என்றாலும், சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல.எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை=**

இல்லை